

அரியலூர் குன்னம், பெரம்பலூர், ஜெயங்கொண்டம் போக்குவரத்து பணிமனையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்துகொண்டு போக்குவரத்துதுறை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார்களுடன் இணைந்து பொங்கல் விழாவில் பங்கேற்று அனைவருக்கும் பொங்கல் மற்றும் புத்தாடைகள் வழங்கினார். இந்த பொங்கல் இனிய பொங்கலாக,சமத்துவப் பொங்கலாக உங்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும் பொங்கலாக மாறிட நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பிலும், எனது பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். உடன் போக்குவரத்து அலுவலர்கள், ஊழியர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### தஞ்சை ச.முரசொலி எம்.பி. ஏற்பாட்டின் பேரில்

# மாணவ, மாணவிகளுக்கு போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல் பயிற்சி!

## ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வெ.இறையன்பு பங்கேற்பு!

தஞ்சாவூர் ஜன. 14 - தஞ்சாவூர் மாவட்டம், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தஞ்சை நாடாளு மன்ற உறுப்பினர் ச.முரசொலி ஏற்பாட்டின் பேரில் மாணவ, மாணவிகளுக்கு போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல் பயிற்சி நடைபெற்றது.




இதில் சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் ஓய்வு பெற்ற தலைமை செயலாளர் வெ.இறையன்பு பங்கேற்று மாணவர்களிடம் பேசியதாவது:

போட்டித் தேர்வுக்கு மட்டும் படித்தால் வெற்றி பெற முடியாது. அதனுடன் இணைந்து மற்றவற்றையும் தொடர்ந்து படிப்பவர்களால்தான் வெற்றி பெற முடியும்.

கொரோனாவுக்கு பிறகு பல செய்தித்தாள்கள், வார, மாத இதழ்களின் விற்பனை வெகுவாக குறைந்து விட்டது. தற்போது செய்தித்தாள்கள் படிக்கும் மாணவர்கள் குறைந்து விட்டனர்.

உலக நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கும், நம்முடைய பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கும், நம்முடைய மொழி வளத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்கும், நமது தகவல் பரிமாற்றத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும், நன்றாக எழுத, மேடையில் பேச பயிற்சி பெறுவதற்கும் செய்தித்தாள் வாசிப்பு பயன்படும்.

மாணவர்கள் ஒரு விஷயத்தை விவாதிப்பதற்கும், தெரிந்து கொள்வதற்கும், கற்றுக் கொள்வதற்கும், பொது அறிவைப் பெறுவதற்கும், அவற்றை வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டு பார்ப்பதற்கும் செய்தித்தாள்களை வாசிப்பது கட்டாயமாக இருக்க வேண்டும்.

ஆனால், தற்போது பல மாணவர்கள் செய்தித்தாள்களைப் புரட்டுவது கூட இல்லை. அவர்களுடையே செல்போனில் வரக்கூடிய ஒரு வரி செய்திகளைத்தான் வாசிக்கின்றனர். அதைக்கூட பலர் வாசிப்பதில்லை.

குறுஞ்செய்திகளை வாசிப்பதால் நம்முடைய மொழி மேம்பாடு அடையாது. போட்டித் தேர்வுக்கு படிக்க நினைப்பவர்கள் கல்லூரியில் நுழைகிற போதே நிறைய வாசிக்க வேண்டும். வெறும் பொது அறிவு புத்தகங்களை மட்டுமல்லாமல், செய்தித்தாள்களையும் வாசிக்க வேண்டும். இதன் மூலம், தங்களுடைய தகுதியை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

போட்டித்தேர்வில் ஒரு மதிப்பெண்ணால் கூட நீங்கள் பணியை தவற விடலாம். எனவே போட்டித்தேர்வுக்கு ஒவ்வொரு மதிப்பெண்ணும் முக்கியம். அதற்கு குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் படிக்க வேண்டும் படிப்பை விட உலகில் மகிழ்ச்சியான விஷயம் எதுவும் கிடையாது. வாரத்தில் 5 நாட்கள் படித்தால் 2 நாட்கள் திருப்புதல் என்று உங்களை தயார் படுத்திக்கொண்டால் வெற்றி பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக முரசொலி எம்.பி. வரவேற்றார். முடிவில் கல்லூரி முதல்வர் ரோசி நன்றி கூறினார்.

### மன்னார்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# ஐ.வி.குமரேசனின் தாயார் ராஜலட்சுமி அம்மையார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், ஜன. 14 - திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன் அவர்களின் தாயார் ராஜலெட்சுமி அம்மையார் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் கழக தோழர்களும் அம்மையாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ராஜலட்சுமி அம்மையாருக்கு ஐ.வி. பாலசுப்பிரமணியன். ஐ.வி.குமரேசன் உள்ளிட்ட மகன்கள் உள்ளனர். ஐ.வி.குமரேசன் மன்னை ஒன்றிய கழகத்தின் செயலாளராக கழகப் பணியாற்றி வருகிறார்.

அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகளுடன் மாவட்ட திமுக சார்பில் அமைதி ஊர்வலம் சென்று ராஜலட்சுமி அமையாருக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். அம்மையாரின் இறுதிசடங்கு மாவூர் அருகே உள்ள திருநாட்டியத்தான்குடிஅவரது இல்லத்தின் 12.01.2025 அன்று மாலை நடைபெற்றது.

### தி.மு.க. மாணவர் அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி -மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் - புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

#### புதுக்கோட்டை வடக்கு மாநகரம்

அமைப்பாளர் - எம்.எஸ். அஜ்மீர்ராஜா டி.எஸ்.எண். 3088, கீழ 2வதுவீதி, புதுக்கோட்டை.

துணைஅமைப்பாளர்கள் - 1) பி. விமல் 14/21, காமராஜபுரம் 20வதுவீதி, புதுக்கோட்டை, 2) வி. விஜய்முத்துமார்த்தாண்டன் டி.எஸ். எண். 2588, மேல 3வதுவீதி, புதுக்கோட்டை. 3) எஸ். மகேஸ்வரன் 43, போஸ்நகர் 6வதுவீதி, புதுக்கோட்டை. 4) ஏ. மெய்யப்பன் (எ) பிரசாத் 1271, கம்பன்நகர், புதுக்கோட்டை. 5) மு. அஜித் 23, காந்திநகர் 2வதுவீதி, புதுக்கோட்டை.

#### புதுக்கோட்டை தெற்கு மாநகரம்

அமைப்பாளர் - கு. பிரகாஷ்ராஜ் 800சி, கடைவீதி, முள்ளூர், புதுக்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.எஸ். யோகி லெட்சுமி நகர், சமத்துவபுரம், புதுக்கோட்டை - 622005. 2) க. தமிழ்ச்செல்வன் 34/40, வாரிப்பட்டி, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 622003. 3) ரா. ஹரி சௌராஷ்டிரா கீழ வீதி, திருவப்பூர், புதுக்கோட்டை - 622003. 4) ரெ. வினிதா 22, நடு வீதி, கோவில்பட்டி, திருக்கோகாணம், புதுக்கோட்டை - 622002. 5) ஆர்.டி. கோகுல் மலையப்பா நகர், ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 622003.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

### தி.மு.க. இலக்கிய அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - கே.சி. தெய்வசிகாமணி 91, குருவப்பநாயக்கன்பாளையம், சின்னப்புத்தூர் கிராமம், தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - சிட்டி. ஜி. பிரபு 34பி, முத்துக்குமார் நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - கவின் ஆ. நாகராஜன் 86/ஏ, கண்ணன் நகர், காந்திபுரம் கிழக்கு, அலங்கியம் ரோடு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.


துணை அமைப்பாளர்கள் - 1) மு. இராமசாமி 180, கோவை சாலை, குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம். 2) பி. நந்தகுமார் 7/63, பள்ளிபாளையம், எல்லப்பாளையம்புதூர் அஞ்சல், கொடுவாய் - 641660, திருப்பூர் மாவட்டம். 3) நிரஞ்சன் (எ) கிருஷ்ணசாமி 1/359, காமராஜ் நகர், அலங்கியம், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம். 4) பி. ராஜேந்திரன் கள்ளிகாட்டு தோட்டம், பூமாண்டன் வலசு, மங்களப்பட்டி அஞ்சல், முத்தூர் வழி - 638105, திருப்பூர் மாவட்டம். 5) பி.வி. சுப்பிரமணியம் மன்றாடியார் நகர், குட்டப்பாளையம் அஞ்சல், நத்தக்கடையூர் வழி, காங்கேயம் தாலுக்கா - 638108, திருப்பூர் மாவட்டம். 6) பழனி. சதீஷ் 100/92, தேவி கார்டன், குழந்தை கவுண்டன் வலசு, நத்தப்பாளையம் அஞ்சல், மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

**வி.பி.கலைராஜன் ,**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

### தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் TAPS:

# சிறந்த ஆளுமை மிக்க முதல்வராகப் போற்றப்படுகிறார் நம் முதல்வர்!



தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நெஞ்சம், நிறைந்த அரசு திராவிட முன்னேற்றக் கழகம் அதன் தலைவர் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் புகலிடம் என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே. அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சியில் அமருகின்றதோ, அப்போதெல்லாம் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கொண்டாட்டத்திற்கு அளவே இருக்காது. அந்த வகையில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களை எந்த நேரத்திலும் சந்திக்கலாம். அதே போன்று தற்போதைய முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களையும் எந்த நேரத்திலும் முன் அனுமதியின்றி சந்திக்கக் கூடியவராக உள்ளார். மேலும், கோரிக்கையை வைத்து வென்றுவிடலாம் என்ற மனநிலையில் அனைத்து ஊழியர்கள், ஆசிரியர்களின் சங்கங்கள் எண்ணத்தைக் கொண்டிருந்தது, அதனை செயல்படுத்தும் விதமாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயார் நிலையில் இருந்தது. கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி தரும் அரசாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பக்கம் நிலைத்து நின்று அவர்களின் வாழ்விற்கு உறுதுணையாக இருந்துள்ளது. அதனால்தான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முதலமைச்சரை கட்டிப் பிடித்து இனிப்பு ஊட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். தமிழக முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களும் அவர்களை அரவணைத்து இனிப்பு ஊட்டி மகிழ்ந்தார்கள்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், பொங்கல் முன்பணம் திட்டம், புதிய மருத்துவக் காப்பீடு திட்டம், சம்பள உயர்வு, பஞ்சப்படி, வீட்டு வாடகைபடி என திராவிட முன்னேற்றக் கழக அரசால் கொண்டுவரப்பட்டது.

அரசு ஊழியர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. பணிக்காலத்தில் உயிரிழக்கும் அரசு ஊழியர்களுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்கியது. அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு திட்டம் கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அரணாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டு வருகிறது. மேலும், ஏராளமான தற்காலிகப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்து அவர்களின் வாழ்வை வளமாக்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் முந்தைய அ.தி.மு.க. அரசால் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூய அகவிலைப்படி மற்றும் பணிக்கொடை தொடர்பான நிதி பலன்களை குறைத்தல், பங்களிப்புடன் கூடிய புதிய ஓய்வூதியத் திட்டம் கொண்டு வரப்பட்டதற்கு எதிராக அரசு ஊழியர்களின், ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி 12 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் காலவரையற்ற போராட்டத்தை துவக்கினார்கள். அமைதியான முறையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தை முந்திய அ.தி.மு.க. அரசு எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் போட்டு, காவல்துறை உதவியுடன் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை, ஆண், பெண் என்ற நிலைப்பாராது கைது செய்து சிறையில் அடைத்தது, துன்புறுத்தியது. இவை எல்லாம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மறந்து விடமாட்டார்கள். காவல் துறையையும், சிறையையும் அறியாத அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளானதோடு மட்டுமல்லாது; மான அவமானங்களை இழந்ததாகவே கருதி துடிதுடித்தார்கள். ஒரு சில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தற்கொலையும் செய்து கொண்டார்கள்.



**த.சௌந்தரராஜன்**
இணை இயக்குனர் (ஓய்வு)
நகராட்சி நிர்வாகத்துறை

இவை எல்லாவற்றையும் அலட்சியம் செய்தது முந்தைய அ.தி.மு.க. அரசு. அந்த காலகட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது, இன்னும் சொல்லப்போனால் அரசு ஊழியர், ஆசிரியர்களின் இல்லங்களில் நடக்க இருந்த மகன், மகள் திருமணங்கள் மட்டுமல்லாது அரசு ஊழியர்களின் திருமணங்களும் நின்று போனதும் மறக்க முடியாத ஒன்று, இதனால் பரிதவித்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் குடும்பங்களை இழந்தனர். கணவன் மனைவியை இழந்தார், மனைவி கணவனை இழந்தார். எத்தனை பிள்ளைகள் இறந்தது என்பது அளவிட முடியாத துயரத்தையும், துன்பத்தையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனுபவித்தனர். அந்த நேரத்தில் திராவிட முன்னேற்ற கழக தலைவர் கலைஞர் அவர்களால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அமைதிப்படுத்தி, அவர்களை ஆறுதல் படுத்தியதோடு மட்டுமல்லாது, அமையப்போகும் தி.மு.க. ஆட்சியின்போது அனைத்து குறைகளும் தீர்க்கப்படும் என்று ஆறுதல்படுத்தி உறுதியளித்தார்.

2006ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த போது தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் ஏற்கப்பட்டு, எஸ்மா டெஸ்மா சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டது. இழந்த அனைத்து சலுகைகளும் திரும்ப வழங்கியது. சாதாரணமாக ஒரு அரசு ஊழியர் கைது செய்யப்பட்டால் நன்னடத்தை விதிகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் கலைஞர் அவர்கள் அவைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக நீக்கியதோடு, பணியில் எந்த விதமான இடைவெளி இல்லாமல் அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்தவர்களாகக் கருதி ஆணைகள் வெளியிட்டார். அந்த ஆணைகளால் இழந்த சம்பளங்கள் மீட்டெடுக்கப் பட்டது, அனைத்து விதமான பணப்பயன்களும் திரும்ப கிடைக்கப் பெற்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கும் போதெல்லாம் அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் பொற்காலம் என்றே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கருதினார்கள்.

மீண்டும் 2011 முதல் 2021 வரை ஆட்சி செய்த அ.தி.மு.க. அரசு மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தையே செயல்படுத்தியது. இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் அவர்களை பணியிட மாறுதல்கள் செய்தனர். 2016ல் முன்னாள் முதலமைச்சர் அவர்களால் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்த திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களின் தலைமையில் குழு அமைத்தது. ஆனால் அந்த குழுவில் எந்தவிதமான நடவடிக்கையும் தீர்வும் காணப்படவில்லை.

2001இல் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்க கூட்டத்தில் செல்வி ஜெ. ஜெயலலிதா, பேசும் போது அரசின் வருவாயில் 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்கு பணப்பயன் சென்று சேருகிறது என்று கூறினார். 2017ல் ஈரோட்டில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் ஓய்வூதியம் 100 சதவீதம் சாத்தியமில்லை என்று கூறியுள்ளார். மேலும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அவமதித்து மிரட்டல் விடுத்து பணிக்கு திரும்பாவிட்டால் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்களும் தனியார் நிறுவனத்தை காட்டிலும் அரசு ஊழியர்கள் அதிக சம்பளம் பெறுகிறார்கள் என்று பல லட்சங்கள் செலவு செய்து விளம்பர கேள்வி எழுப்பி அனைத்து செய்தித்தாள்களிலும் வெளிவந்தது, இவைகளையும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மறந்து விடவில்லை.

இவ்வாறாக முந்தைய அ.தி.மு.க. அரசால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள், ஒரு போதும் சங்கங்களை அழைத்து பேச அவர்கள் சிந்திக்கவே இல்லை. இன்னும் சொல்லப்போனால் சங்கங்களை மதிப்பதே கிடையாது. இந்த காலகட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர் கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் முதலமைச்சர் அவர்கள் 2021 இல் பொறுப்பேற்றவுடன் அரசாணை வெளியிட்டு ஊழியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை நீக்கம் செய்தார்கள்.

இவ்வாறாக அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் மற்றக் கட்சியினர் அலட்சியப்படுத்தும் நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளை தீர்வு காண்பதிலும் முதல்வர்களில் முதல்வராக திகழ்கின்றார்.

2021 இல் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்றைய ஆட்சி காலத்தில் கொரோனாவை காரணம் காட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி வழங்கினார். அரசு ஊழியர்கள் மரணமடைந்தால் 10 லட்சம் ரூபாயை ஒரு கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளார். இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம். அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கான கல்வி முன்பணத்தை உயர்த்தி வழங்கியுள்ளார். ஓய்வூதிய பணிக்கொடை 25 லட்சம் என உயர்த்தி வழங்கி உள்ளார். திருமணத்திற்கான கடன் 5 லட்சம் என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டும் கடன் 50 லட்சம் என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு பெற அரசாணை வெளியிட்டுள்ளது, ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்படுவதை தாயுள்ளத்தோடு கருத்தில் கொண்டு ஓய்வு பெற அனுமதித்து ஆணை வெளியிடப் பட்டது. பெண் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பணப் பயன்களுடன் கூடிய 12 மாதங்கள் விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்ல; அது ஓய்வூதியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் தொகை 10 லட்சம் என உயர்த்தி வழங்கப்பட்டது. அதேபோன்று பொங்கல் பரிசுத் தொகையும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது,

தற்போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (Tamil Nadu Assured Pension Scheme TAPS) முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார். இந்த அறிவிப்பு உள்ளபடியே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக அமைந்துள்ளது. இந்த வருடம் பொதுமக்களுக்கு மட்டுமல்லாது, அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கும் சிறப்பு வாய்ந்த ஆண்டாக அமைந்துள்ளது, தமிழ்நாட்டில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட அரசாணை வெளியிடப்பட்ட நிலையில் ராஜஸ்தான், சத்தீஸ்கர், பஞ்சாப், இமாச்சல் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அறிவிப்பு நிலையிலே உள்ளது என்பதை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உணர வேண்டும்.

சுமார் 22 ஆண்டுகளுக்கு மேலாக சாத்தியமே இல்லை என்று முந்தைய ஆட்சியாளர்களால் சொல்லப்பட்டதை, தனது தலைமையிலான அரசால் செயல்படுத்த முடியும் என்று கருதி, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கையை ஏற்று, பரிசீலித்து அவர்கள் பயன்பெறும் வகையில் அறிவிப்பு செய்தது. இந்தியாவில் உள்ள மாநிலங்களை காட்டிலும் அனைத்து வகையிலும் உயர்ந்திருக்கும் தமிழ்நாடு அரசு, ஊழியர்கள், ஆசிரியர்களின் வாழ்விலும் உயர்ந்து உள்ளது என்பதை இந்நேர்வு சுட்டிக்காட்டுகிறது, சிறந்த நிர்வாக ஆளுமை மிகுந்த முதல்வர் என்று போற்றி புகழப்படுகிறார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா மாவட்ட அளவில் நடைபெற்ற மாபெரும் இறுதி போட்டிகள் கோல போட்டி, கைப் பந்து, கபடி போட்டிகள் மாநில வர்த்தகரணி துணை செயலாளர் சீனிவாசன் ஏற்பாட்டிலும் கிரிக்கெட் , பெண்களுக்காக ஓட்டப்பந்தயம், மெதுவாகச் செல்லும் சைக்கிள் போட்டி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன் ஏற்பாட்டிலும் நடைபெற்றது. இறுதிப் போட்டிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் பார்வையிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வெற்றிச்செல்வன், நாகராஜ் , கோவிந்தசாமி, சாவித்திரி, சந்திரன் , கதிரவன், செந்தில் , நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், அஸ்லாம், வேல்மணி, மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன், ராஜேந்திரன், அறிஞர், சாஜித் , வெங்கடப்பன் உள்ளிட்ட ஏராளமான பெண்கள், இளைஞர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.